# திருச்சி சிவா பேச்சு... முதல் பக்கத் தொடர்ச்சி

இதுகுறித்து சட்டத்துறை ஆய்வு மேற்கொள்ளும். ஆனால் இப்போது அமைச்சர்களுக்குப் பதில் அதிகாரிகளே முடிவெடுத்து ஆளுநருக்கு அனுப்பி வைப்பார்கள். ஆளுநர் அதை திருத்தலாம் அல்லது தள்ளுபடி செய்து விடலாம். ஆக முதலில் முதலமைச்சர்கள் ஒன்றுமில்லாதவர்களாக தேவையற்றவர்களாக இருக்கும் நிலையில் இப்போது அமைச்சரவையும் ஒன்றுமில்லாதவையாக தேவையற்றவையாக விடுகின்றது.

மூன்றாவது, ஏதாவதொரு அமைச்சர் ஒரு முடிவெடுத்தால், அதை நிறைவேற்றக் கூடியவர் செயலாளர் தான் என்கிற நிலை ஏற்படுகிறது. செயலாளர் அந்த முடிவை ஏற்காத பட்சத்தில், அந்த அமைச்சருக்குத் தெரியாமல் அதுபற்றி நேரடியாக தலைமைச் செயலாளரிடமோ துணை நிலை ஆளுநரிடமோ அந்த செயலாளர் தனது குறிப்பினை அனுப்பிடலாம். ஆக அமைச்சரும் தேவையற்றவராகி விடுகிறார்.

நான்காவதாக, டெல்லியும் மற்ற மாநிலங்களவைப் போல உள்ள மாநிலம்தான். அதிகார அமைப்புகள், கார்ப்பரேஷன்கள், கமிஷன்கள், இவைகளால் நடத்தப்படக்கூடியவை. இதன் தலைவர்களாக, உறுப்பினர்களாக இதுவரை மாநில அரசின் பரிந்துரைகளின் பெயரில் துணை நிலை ஆளுநர்தான் நியமித்து வந்தார்.

ஆனால் இனி அவர்களை துணை நிலை ஆளுநர்கள் அவர்களாக நியமித்து விடுவர். மாநில அரசுகளோ கை கட்டிக் கொண்டிருக்கவேண்டியதுதான். இப்படி ஒன்றன் பின் ஒன்றாக முதல்வரும், அமைச்சரவையும், அமைச்சரும் அதிகாரமில்லாதவர்களாகி விடுவார்கள்.

முன்பெல்லாம் அமைச்சரவை முடிவெடுத்து துணை நிலை ஆளுநருக்கு தெரியப்படுத்தியபின், அவர் சட்டமன்றத்தை கூட்டுவது குறித்து அறிவிப்பு வெளியிடுவார். இனி அப்படி அல்ல. ஆளுநர் அவராகவே சட்டமன்றத்தை கூட்டிவிடலாம். அவசரத் தேவை காரணமாக சட்டமன்றத்தை கூட்ட முதலமைச்சரோ அமைச்சர்களோ முடிவு செய்தாலும், அதற்கான அதிகாரம் அவர்களுக்கு கிடையாது.

**சுக்குநூறாக சிதைந்து போகும்!**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசுக்கு மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது முக்கியக் கடமையாகும். ஆனால் இப்போது அது முடியாது என்கிற நிலை உள்ளது. எனவே தான் நாங்கள் மாநில சுயாட்சி கேட்கிறோம். எல்லா அதிகாரங்களும் ஒன்றிய அரசிடம் மையங்கொண்டால் என்ன நடக்கும்? சுக்கு நூறாக சிதைந்துதான் போகும்.

கூட்டாட்சிக்குப் பேர் போன இந்தியாவில், எல்லாமே அச்சுறுத்தலுக்குள்ளாகி உள்ளது. மதச்சார்பற்ற நிலை அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளது. இந்த சட்ட முன்வடிவு கூட்டாட்சியின் அடிவேரையே தகர்த்தெறிந்து விடும் என்றுதான் நாங்கள் பயப்படுகிறோம்.

அண்ணல் அம்பேத்கரும் உச்சநீதிமன்றமும் தெரிவித்த கருத்துக்களுக்கு முற்றிலும் மாறாக அரசியல் சட்ட நெறிமுறைகளை அலட்சியம் செய்யும் வகையில் இந்த மசோதா உள்ளது.

அரசின் முடிவை ஆதரிக்கும் ஒரு சில கட்சிகளுக்கு நான் தெரிவிக்க விரும்புவது இதைத்தான். 100 குடிசைகள் உள்ள இடத்தில் 100வது குடிசை தீப்பற்றி எரிந்தால், முதல் குடிசையில் தூங்கிக் கொண்டிருந்தவன், உடனடியாக தூக்கத்தினின்று விழித்தெழுந்து அங்குமிங்கும் ஓடி தீயை அணைக்க முயற்சிப்பார். தீயணைப்புத் துறையை உடனே அழைப்பான் உதவி செய்வது மட்டுமல்ல; தன்னுடைய இல்லத்தையும் பாதுகாப்பதும் அவரது நோக்கமாகும்.

**ஜனநாயகம் இன்றைக்கு பெரும் ஆபத்தில் உள்ளது!**

இதுநாள் வரை நமது சுதந்திரத்தை பாதுகாத்து வந்துள்ளோம். ஜனநாயகத்தை பாதுகாத்து வந்துள்ளோம். உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா என்று நாம் அடிக்கடி பெருமையாகச் சொல்லிக் கொண்டு வருகிறோம்.

அத்தகைய ஜனநாயகம் இன்றைக்கு பெரும் ஆபத்தில் உள்ளது. மாநில அரசுகளுக்கு எதிராக ஏன் பல்வேறு குற்றச்சாட்டுகள்? சுயமாக எந்த மாநிலமும் செயல்பட முடியவில்லை. எந்தச் சட்டத்தையும் நிறைவேற்ற முடியவில்லை. சட்டமன்றத்தில் ஏதாவதொரு சட்டத்தை நிறைவேற்றினால், அதற்கு ஆளுநர் ஒப்புதல் தர மறுக்கிறார்.

அதனால் மக்களுக்கு முறையாக பணியாற்ற முடியவில்லை. (குறுக்கீடுகள்) மக்களின் தேவைகளை அவர்களால்தான் அறிந்துகொள்ள முடியும். எனவேதான் மாநில அரசுகள் ஏற்படுத்தப்படுகின்றன. மாநில அரசுகளின் அதிகாரங்களில் ஒன்றிய அரசு நேரடியாகத் தலையிடுகிறது அல்லது ஆளுநர்கள் மூலம் தலையிட முயற்சிக்கிறது.

**டெல்லிக்கு தன்னாட்சியை மீட்டெடுப்போம்!**

எங்களின் கருத்துக்கள் எல்லாம் ஒரு தலைப்பட்சமானதல்ல. எதற்காக மாநில அரசுகளின் அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன. எதற்காக முதலமைச்சர்கள் எல்லாம் ரப்பர் ஸ்டாம்ப் என்கிற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இன்னும் சொல்லப்போனால், எல்லாவற்றையும் தேவையற்றதாகச் செய்து விடுகிறீர்கள். அப்படி என்னதான் பெரியதாக எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்?

நான் ஏற்கனவே இதுபற்றி தெரிவித்துள்ளேன். ஜனநாயக நடைமுறையில், ஒருநாள், ஆட்சிக்கட்டிலில் இல்லாத அந்த கால கட்டத்தில், இதுபோன்று இயற்றப்பட்ட சட்டங்களுக்காக புலம்ப வேண்டி இருக்கும்; வருத்தப்பட வேண்டி இருக்கும். அது வெகு தூரத்தில் இல்லை.

2024 ஆம் ஆண்டுத் தேர்தலில் இந்திய தேசிய முன்னேற்றத்திற்கான கூட்டணி (I.N.D.I.A) வெல்லத்தான் போகிறது. அப்போது நாங்களும் ஆட்சிக்கு வந்து, டெல்லிக்கு தன்னாட்சியை மீட்டெடுப்போம்.

இவ்வா திருச்சி சிவா பேசினார்.

# ஆர்கானிக் இரசாயனங்களின் மேம்பாட்டிற்கு ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 9 -

சீனா மற்றும் அமெரிக்காவிலிருந்து ஆர்கானிக் இரசாயனங்களை இந்தியா இறக்குமதி செய்தது குறித்தும் 2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டில் ஆர்கானிக் இரசாயனங்களின் தேவை மற்றும் விநியோகத்தில் தன்னிறைவு அடைய ஒன்றிய அரசால் எடுக்கப்பட்ட/முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து கதிர் ஆனந்த், 2022-23 ஆம் ஆண்டில் சீனா மற்றும் அமெரிக்காவிலிருந்து ஆர்கானிக் இரசாயனங்களை இந்தியா இறக்குமதி செய்தது, முறையே US$14 பில்லியன் மற்றும் US$4 பில்லியனாக உள்ளது என்பது உண்மையா? அப்படியானால், அதன் விவரங்கள்?

2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டில் ஆர்கானிக் இரசாயனங்களின் தேவை மற்றும் விநியோகத்தில் தன்னிறைவு அடைய ஒன்றிய அரசால் எடுக்கப்பட்ட/முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் யாவை? ஆர்கானிக் இரசாயன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக ஒன்றிய அரசு போதுமான நிதியை ஒதுக்கியுள்ளதா? ஆர்கானிக் இரசாயனங்கள் மற்றும் நாட்டில் உற்பத்தி விவரங்கள் என்ன? என்று வினா எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் இரசாயனங்கள் மற்றும் உரங்களுக்கான ராஜாங்க அமைச்சர் பக்வந்த் குபா எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

வர்த்தக நுண்ணறிவு மற்றும் புள்ளியியல் இயக்குநரகத்தின் (DGCI&S) படி, 2022-23 ஆம் ஆண்டில் சீனா மற்றும் அமெரிக்காவிலிருந்து ஆர்கானிக் கெமிக்கல்களை இந்தியா இறக்குமதி செய்தது முறையே US$6.44 பில்லியன் மற்றும் US$1.66 பில்லியன் ஆகும்.

பெட்ரோலியம், கெமிக்கல் மற்றும் பெட்ரோகெமிக்கல் முதலீட்டுப் பகுதிகளில் (பிசிபிஆர்எஸ்) முதலீட்டை ஈர்ப்பதற்கும் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் பி.சி.பி. ஐ. ஆர். கொள்கையை இந்திய அரசு அறிவித்துள்ளது. PCPIRS ஆனது இரசாயன மற்றும் பெட்ரோ கெமிக்கல் துறைகளை ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் பெரிய அளவில் ஊக்குவிக்கிறது. பிசிபிஐஆர்எஸ் உயர்தர பொதுவான உள்கட்டமைப்பு மற்றும் ஆதரவு சேவைகளுடன், கிளஸ்டர் அடிப்படையிலான அணுகுமுறையில், வணிகங்களை அமைப்பதற்கு உகந்த போட்டி சூழலை வழங்குவதற்கு கருத்தாக்கப்பட்டுள்ளது. தற்போது ஆந்திரப் பிரதேச மாநிலங்களில் (விசாகப்பட்டினம்) நான்கு பெட்ரோலியம், கெமிக்கல் மற்றும் பெட்ரோ கெமிக்கல் முதலீட்டுப் பகுதிகள் (பிசிபிஆர்எஸ்) செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

குஜராத் (தஹேஜ்), ஒடிசா (பாரதீப்) மற்றும் தமிழ்நாடு (கடலூர் மற்றும் நாகபட்டினம்) ஆகியவை பிசிபிஐஆர் கொள்கை, 2007ன் கீழ் இந்தத் துறைகளில் முதலீடு மற்றும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன.

ஆர்கானிக் இரசாயன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக ஒன்றிய அரசு நிதி ஒதுக்கியுள்ளது குறித்தும் ஆர்கானிக் இரசாயனங்கள் மற்றும் நாட்டில் உற்பத்தி விவரங்கள் குறித்து இரசாயனங்கள் மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் துறை இந்தத் தகவலைப் பராமரிப்பதில்லை என்று அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.

சென்னை தெற்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆலப்பாக்கம் கு.சண்முகம் எம்.சி. மறைவு!

## அமைச்சர்கள் கே.என்.நேரு - மா.சுப்பிரமணியன் அஞ்சலி!

சென்னை, ஆக. 9-

சென்னை தெற்கு மாவட்டம் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினரும், மதுரவாயல் பகுதி முன்னணி கழகத் தோழருமான ஆலப்பாக்கம். கு.சண்முகம் (வயது 68) அவர்கள் நேற்று முன்தினம் (7.8.2023) காலை இயற்கை எய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழக முதன்மை செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் உள்ளிட்ட கழக முன்னணி யினர், தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த ஆலப்பாக்கம் கு.சண்முகம் உட லுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற அமைதிப் பேரணியில் ஆலப்பாக்கம் கு.சண்முகம் பங்கேற்று நடந்துச் சென்று கொண்டிருந்த போது திடீர் மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது மறைவுற்றார்.

ஆலப்பாக்கம் கு.சண்முகம் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீதும், கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மீதும் அளவற்ற பற்று கொண்டவர் ஆவார்.



திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாளினை முன்னிட்டு சட்டமன்ற தொகுதியின் குக்கிராமங்கள் தோறும் கலைஞர் அவர்களின் திருவுருவப்படங்கள் வைத்து கழக உடன்பிறப்புக்கள் மலரஞ்சலி செலுத்தினர். தொகுதி தி.மு.க. அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி புகழ் ஓங்க மலரஞ்சலி செலுத்தினார்.

# ‘Throw The Tyrants Out’

# (இந்தக் கொடுங்கோலர்களைத் தூக்கி எறியுங்கள்)

## “சிலந்தி” கட்டுரை

..... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

வன்முறைகளில் 160க்கும் மேற்பட்டோர் உயிரிழந்து விட்டதாகக் கூறப்பட்டாலும் சாவு எண்ணிக்கை இன்னும் பெருமளவில் இருக்கக் கூடும் என்றும் அஞ்சப்படுகிறது!

பா.ஜ.க. ஆளும் ஹரியானாவும் இப்போது மதக் கலவரத்தால் மிரண்டு அஞ்சிக் கிடக்கிறது!

அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கும் மதச்சார்பு வெறியாட்டங்களை (அரசு நினைத்திருந்தால்) தடுத்திருக்க முடியும்! விஸ்வஹிந்து பரிஷத் எனும் சங்பரிவார் அமைப்பு நடத்திய ஊர்வலத்தில், பசு பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த மோனுமனேசார் எனும் இந்து வெறியன் ஒருவன் (இரண்டு முஸ்லிம்களை கொலை செய்துவிட்டு தலைமறைவாகியவன்) தானும் கலந்து கொள்ளப்போவதாக அறிவித்து நடந்த ஊர்வலம் அது! அவன் கலந்து கொள்வதாக ஊர்வலம் நடத்த இருக்கும் தேதிக்கு இரு தினங்கள் முன்பே அறிவித்து சமூக ஊடகங்களில் அந்தச் செய்தி பரவுகிறது. ஹரியானாவை ஆளும் பி.ஜே.பி. அரசு இதுகுறித்து கவலைப்படவே இல்லை!

முஸ்லிம் மக்கள் அதிகம் வாழும் பகுதிகள் வழியாக அந்த இந்து அமைப்பின் ஊர்வலம் செல்ல அனுமதிக்கப்படுகிறது. வன்முறை வெடிக்கிறது; இரு தரப்பாரும் வன்முறைக்குக் காரணத்தை ஒருவர் மீது ஒருவர் சுமத்திக் கொள்கின்றனர். ஆனால், ஹரியானாவை ஆளும் பா.ஜ.க. அரசு அந்த ஊர்வலத்துக்கு எப்படி அனுமதி தந்தது? தேடப்படும் குற்றவாளி ஒருவன் கலந்து கொள்ளப் போவதாக அறிவித்து சமூக ஊடகங்களில் இரு தினங்களாக செய்தி பரப்பிய பின்னரும் ஹரியானா அரசு உரிய நடவடிக்கை எடுக்காதது ஏன்? இதுபோன்ற கேள்விகளை “டைம்ஸ் ஆப் இந்தியா” போன்ற ஏடுகளே எழுப்புகின்றன!




**இவை எல்லாம் எதனைத் தெளிவாகக் காட்டுகின்றன என்பதை நாடு உணர வேண்டும். எத்தனை ஆயிரம் இந்திய மக்கள் தங்கள் இன்னுயிரைப் பலிகொடுத்தாலும் எங்களுக்குக் கவலையில்லை; அவர்களின் உடமைகள், குடியிருப்புகள் தீக்கிரையானாலும் பரவாயில்லை; எங்கும் மரண ஓலங்கள். கற்பழிப்புக் கதறல்கள், சிசுவதைகள், இந்த நாட்டுப் பெண்களை நிர்வாணமாக்கி மானபங்கப் படுத்துதல் போன்ற சம்பவங்கள் தொடர்கதையானாலும் எங்களுக்கு எந்தவித மனக்கிலேசமும் கிடையாது!**



**இந்தியாவை இந்து நாடாக அதாவது இந்துக்களுக்கு மட்டுமான நாடாகவே மாற்றுவோம்!**

**இது வேத பூமி, சனாதான தர்மமே இங்கு நிலை நிறுத்தப்பட வேண்டும். வர்ணாசிரமக் கொள்கை ஒன்றையே இந்த நாடு கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறித் திரிகிறது ஒரு கூட்டம்!**

இந்தக் கூட்டமும் அதன் ஆதரவாளர்களும் மீண்டும் ஒருமுறை ஆட்சிக்கு வந்து விட்டால் இன்றைய இந்திய அரசியல் சட்டம் இருக்காது.

கழகத் தலைவர் தளபதி ஸ்டாலின் குறிப்பிட்டபடி தமிழ்நாடே இருக்காது! அதுமட்டுமல்ல; இந்த குள்ளநரிக் கூட்டத்தின் ஆட்சியில், இந்தியாவின் ஜனநாயகம் கேள்விக் குறியாகி நிற்கிறது.

பொருளாதாரம் சிதைந்து பண மதிப்பு இழந்து எல்லா மட்டங்களிலும் விலைவாசிகள் ஏறிக் கொண்டிருக்கின்றன!

ஏழை எளிய மக்கள் அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு நாளையும் தள்ளிட விழி பிதுங்கிக் கிடக்கின்றனர்!

“சீனி சக்கரை சித்தப்பா; ஏட்டில் எழுதி நக்கப்பா” எனும் விதத்தில் நாட்டில் நொந்து நூலாகி கிடக்கும் மக்கள் முன், நாளும் விதவிதமாக உடை உடுத்தி, பலவித தொப்பிகள் அணிந்து நமது நாட்டின் பிரதமர் வித்தை காட்டிக் கொண்டிருக்கிறார்.

**“அச்சே தின் ஆனே வாலே ஹை....”** என முழங்கி, ஆட்சியை பிடித்து, ஒன்பது ஆண்டுகள் கடந்து 10 ஆவது ஆண்டிலும் அதே பழைய பல்லவியைப் பாடிக் கொண்டிருக்கிறார். இந்திய மக்கள், நடந்து கொண்டிருக்கும் பி.ஜே.பி. கூட்டணி ஆட்சியில் பல முனைகளிலும் பட்டிடும் அவதிகளைக் காணும்போது, அமெரிக்காவில் ஒருகாலத்தில் ஒலித்த தொடரே நினைவிலாடுகிறது!

**நாகரிகம் கருதி, அந்த சொற்றொடரை சிறிது மாற்றி அமைத்து** Throw The Tyrants Out .

**‘இந்தக் கொடுங்கோலர்களைத் தூக்கி எறியுங்கள்’ - என்ற நிலையில் வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலை அணுகுவோம்!**